**தலைப்பு 16 – பாராளுமன்றம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

தலைப்பு 16 – பாராளுமன்றத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் ஆகியவற்றை உள்ளடக்கிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) பிரிவின் ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புரைகள் உள்ளடக்கப்பட்ட பொழிப்பு அறிக்கை யூன் 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்திற்குரிய வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை ஆகஸ்ட் 06 ஆந் திகதி பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் பாராளுமன்றத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்று என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது. இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பு

இந்த நிதிக்கூற்றுக்களை பொதுவான ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்படடுள்ள ஏற்பாடுகளுக்கமைய தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றினை தீர்மானித்தல் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்தினால் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகரச்சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் பாராளுமன்றத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளக கட்டுப்பாட்டு முறைமையினை தயாரித்து பேணிச் செல்லப்படுவதாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர் சான்றுபடுத்த வேண்டியதுடன், அந்த கட்டமைப்பின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் காலத்திற்கு காலம் மீளாய்வொன்றினை மேற்கொண்டு, அதற்கமைய கட்டமைப்பினை ஆக்கபூர்வமானதாக நடாத்திச் செல்வதற்கு தேவையான மாற்றங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்படல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்னால் கணக்காய்வின் போது துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், என்னால்

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்காக அடிப்படையொன்றினை பெற்றுக்கொள்ளும் போது, மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணல் மற்றும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டன. பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதற்கு, அவை தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் ஆகியவற்றால் ஏற்படுகின்றமை காரணமாக அமைகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பில் அபிப்பிராயமொன்றினை தெரிவிக்கும் எண்ணத்தில் அல்லாது, சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதற்காக உள்ளக கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெற்றுக்கொள்ளப்பட்டது.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் என்பவை பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையாக கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக மற்றும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்கள் ஒட்டுமொத்தமாக மதிப்பீடு செய்யப்பட்டன.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள், உள்ளக கட்டுப்பாட்டிலான முக்கியமான குறைபாடுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்களுடன் இணங்குவதாக,

(ஆ) முன்னைய ஆண்டிற்குரிய நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் செய்யப்பட பரந்துரைகள் நடைமுறைப்படுத்தப்பட்டு இருந்தன.

## 1.6 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.6.1 நிதிக்கூற்றுக்கள் சுற்றறிக்கை ஏற்பாடுகளுடன் இணங்காமை

2023 நவம்பர் 30 திகதிய 05/2023 ஆம் இலக்க அரச கணக்கீட்டு வழிகாட்டல்களின் பிரகாரம், நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டிருக்க வேண்டிய போதிலும் அந்தத் தேவைகளிலிருந்து விலகிய சந்தர்ப்பங்கள் பின்வருமாறு.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அரச கணக்கிட்டு பணிப்பாளர் நாயகத்தின் 2023.11.30 ஆம் திகதிய 05/2023 ஆம் இலக்க அரச கணக்கீட்டு வழிகாட்டல் 8.2 ஆம் பந்தியின் பிரகாரம் ஜெயந்திபுறையில் அமைந்துள்ள காணி மற்றும் அதன் போலீஸ் சேவை மகளிர் பிரிவினால் ரூபா 7.8 மில்லியன் செலவிட்டு நிர்மாணிக்கப்பட்டு இருந்த சிற்றுண்டிச் சாலை மற்றும் ஏனைய கட்டிடங்களின் பெறுமதியை அடையாளம் கண்டு கணக்கிடப்பட்டிருக்கவில்லை. | அரச கணக்கிட்டு திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் SA/GFS/01/01/11/016 ஆம் இலக்க மற்றும் 2024.05.09 இலக்கமுடைய திகதிய கடிதத்தின் மூலம் ஜெயந்தி பூரவில் அமைந்துள்ள கட்டிடம் மற்றும் காணிகளின் மதிப்பீட்டுப் பெறுமதி கிடைக்க பெற்றிருப்பதுடன் 2024 ஆம் வருடத்தினுள்ளும் போலீஸ் சேவை மகளிர் பிரிவினால் ரூபா 7.8 மில்லியன் செலவிட்டு நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டிடங்களின் நிதி கூறறினுள் காட்டப்பட வேண்டிய பெறுமதி எவ்வளவு என்பதை தீர்மானித்து அதன் பிரகாரம் கணக்கீட்டை மேற்கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | ஈடுபடுத்தப்பட்டுள்ள வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) மீளாய்வாண்டிலே வெளிநாட்டு நன்கொடையாக கிடைக்கப்பெற்றுள்ள பொருட்களின் பெறுமதியை மதிப்பிட்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை என்பதுடன் நிதி கூற்றுகளில் அதற்கான தேவையான வெளிப்படுத்தல்களும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வெளிநாட்டு நன்கொடையாக கிடைக்கப்பெற்ற பொருட்களின் பெறுமதியை மதிப்பிடுவதற்கு குழு ஒன்று தற்போதும் நியமிக்கப்பட்டுள்ளதுடன் அந்த குழுவின் அறிக்கையின் பிரகாரம் கணக்கிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | பெறுமதியை சரியாக அடையாளம் கண்டு கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.6.2 கணக்கீட்டு குறைபாடுகள்

### (அ) அரச உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு தொடர்பான இணக்க கூற்று

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி தினத்தில் அரச உத்தியோகத்தர்களுக்கு முற்பணங்கள் 'பி' கணக்குக்குரிய திணைக்களத்தின் கட்டுப்பாட்டு கணக்குகளின் மீதி மற்றும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டு மொத்தத்திற்கிடையில் ரூபா 43,051 வேறுபாடொன்று காணப்பட்டது. | 2021 ஆம் வருடத்தில் பெரும் முயற்சி ஒன்றின் பின்னால் வேறுபாட்டை ரூபா 43,051 வரை குறைத்துக் கொள்வதற்கு முடியுமானதுடன் மேலும் வேறுபாட்டை அடையாளம் காண்பதற்காக நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதுடன் அதன் பிரகாரம் இந்த வேறுபாட்டை கண்டறிய முடியாத பட்சத்தில் அரச கணக்கிட்டு பணிப்பாளர் நாயகத்தின் மூலம் இது சம்பந்தமான ஆலோசனையை பெற்றுக்கொண்டு தேவையான சீராக்கங்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | வேறுபாட்டை அடையாளம் கண்டு சரியாக கணக்கிடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

### 2.1.1 நிதிஏற்பாட்டுப் பயன்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிப்பிரமாணம் 50 மற்றும் நிதிப்பிரமாணம் 127(5) இற்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும் ஆரம்ப மதிப்பீட்டு தயாரிக்கும் போது மிகை ஏற்பாடு மேற்கொள்ளப்பட்டதன் காரணமாக 08 மீண்டெழும் செலவின விடயங்களின் கூட்டுத் தொகை ரூபா 200,800,000 ஆன நூற்றுக்கு 3 இலிருந்து நூற்றுக்கு 76 வரையான வீச்சில் ஏற்பாடுகள் | மின்சாரம் மற்றும் நீர் பட்டியல்களின் கட்டணங்கள் அதிகரித்தல், இலங்கை மின்சார சபை மற்றும் நீர் வழங்கள் சபை அறவிடுகின்ற பராமரிப்பு கட்டணம் அதிகரித்தல்', வெட் வரி அதிகரித்தல் மற்றும் வெளிவாரியான சேவை மற்றும் விநியோகம் வழங்குகின்ற நிறுவனங்களின் கட்டணங்கள் அதிகரித்தல் ஆகியன காரணமாக பாராளுமன்ற நடவடிக்கைகளை சுமுகமாக பேணி செல்வதற்கு ஒரு | நிதிப்பிரமாணம் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| நி.பி. 66 ஊடாக வேறு 06 மீண்டெழும் செலவின விடயங்களிற்கு மற்றும் மூலதன செலவின விடயமொன்றிற்கு மாற்றப்பட்டிருந்தது. | சில செலவு விடயங்களின் கீழ் ஒதுக்கப்பட்டு இருந்த ஏற்பாடுகள் போதுமானதாக இல்லாததன் காரணமாக ஏற்பாடுகளை மாற்றீடு செய்யப்பட்டதுடன் அவ்வாறு ஏற்பாடுகள் மாற்றீடு செய்யப்பட்ட செலவு விடயங்களின் ஏற்பாடுகள் சேமிக்கப்படுவதற்கு அல்லது பற்றாக்குறை ஏற்படுவதற்கான தாக்கங்கள் காரணமாக குறித்த மாற்றீடு பத்திரங்கள் வெவ்வேறாக காட்டப்பட்டுள்ளது. | |

**2.2 பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகளிற்கு உட்படல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் கூற்றில் (திறைசேரி கணனி அச்சீட்டு - SA 92) மற்றும் நிறுவனத்தின் பொறுப்புக்கள் தொடர்பான பதிவேட்டில் உள்ளடக்கியிருக்காத மீளாய்வாண்டிற்குரிய இரண்டு செலவின விடயங்களின் கூட்டுத் தொகை ரூபா 24,266,808 ஆன பொறுப்புக்கள் 2024 ஆண்டில் தீர்க்கப்பட்டிருந்தன. | 2023 ஆம் வருடத்தின் பொருட்கள் மற்றும் சேவைகளுக்குரிய வெட் வரி அதிகரித்தல், இலங்கை மின்சார சபை மற்றும் நீர் வழங்கள் சபையின் பட்டியல் கட்டணங்கள் அதிகரித்தல் போன்ற எங்களுடைய கட்டுப்பாட்டுக்கு அப்பால் உள்ள நிலையின் காரணமாக ஏற்பாடுகளின் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதுடன் ஏற்பாடுகள் இல்லாமல் பொறுப்புக்கள் சிகாஸ் மென்பொருளுக்கு உள்ளடக்கப்படுவதற்கு முடியாததன் காரணமாக இந்த குறைபாடுகள் நேர்ந்து உள்ளதுடன் 2024 ஆம் வருடத்தில் அந்த நிலைமையை இழிவு மட்டத்துக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக குறிப்பிடப்பட்டிருந்தது. | குறித்த பொறுப்புக்கள் மற்றும் கடப்பாடுகள் சரியாக அடையாளம் கண்டு கணக்கிடப்பட வேண்டியதுடன் ஏற்பாடுகளை விஞ்சி கடப்பாடுகளுக்கு முற்படுதல் தவிர்க்கப்பட வேண்டும். |

**2.3 சட்டங்கள் விதிகள் மற்றும பிரமாணங்களுடனான இணக்கமின்மைகள்.**

மாதிரி கணக்காய்வு பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள் விதிகள் மற்றும பிரமாண ஏற்பாடுகளுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் பின்வருமாறு விபரிக்கப்படுகின்றது.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | | | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|---|---|
| | **சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுக் கான தொடர்பு** | **பெறுமதி ரூபா** | **இணக்கமின்மை** | | |
| (i) | **இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு நிதிப் பிரமாணக் கோவை** | | | | |
| | நிதிப் பிரமாணம் 260 | 81,469,324 | 2023 ஜனவரி மாதத்தில் இருந்து ஜுலை மாதம் வரையான காலப்பகுதிக்குள் உணவுப் பொருட்கள் கொள்வனவு செய்வதற்காக செலுத்தப்பட்ட கூட்டு மொத்தம் ரூபா 81,469,324 ஆன 122 வவுச்சர் பத்திரங்களின் கொடுப்பனவை பெற்றுக் கொண்ட நபரிடமிருந்து கொடுப்பனவை பெற்றுக் கொண்டதாக உறுதிப்படுத்தல் ஒன்று பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | வவுச்சர் பத்திரங்களின் காசோலை பத்திரம் ஒன்று பெற்றுக் கொண்டதற்காக கையொப்பம் இடப்படாதிருந்தால் அந்த குறைபாடு ஏற்படாத வண்ணம் எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது. | கொடுப்பனவை மேற்கொள்ளப்படும் போது குறித்த நபருக்கே பணம் கொடுக்கப்பட்டதாக உறுதிப்பாடு ஒன்று பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ii) | **அரச கணக்குகள் சுற்று நிருபம்** | | | | |
| | 2023 நவம்பர் 30 ஆம் திகதிய 05/2023 ஆம் இலக்கமுடைய அரச கணக்குகள் வழிகாட்டலின் | - | குறித்த வைப்பு இலக்கத்தை மாத்திரம் உபயோகப்படுத்தி மாதிரியை திருத்தம் மேற்கொள்ளப்பட வேண்டிய | 2024 ஆம் வருடத்தின் நிதி கூற்று தயாரிக்கப்படும் போது ஏசிஏ 4 மாதிரியின் தேவையான | சுற்று நிருபத்தின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| 6.2 ஆம் இலக்க பந்தி | போதிலும், பாராளுமன்றத்தின் நிதி கூற்றுகளில் ஏசிஏ 4 மாதிரியின் அவ்வாறு திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை | திருத்தங்களை மேற்கொள்வதற்கு குறித்துக்கொள்ளப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது . |

## 2.4 நிமித்த உப கட்டு நிதி வழங்குதல் மற்றும் தீர்ப்பனவு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிமித்த உப கட்டு நிதி பெற்றுக் கொடுக்கும் போது ஒரு பதவி நிலை உத்தியோகத்திற்கு மாத்திரம் முற்பணங்கள் வழங்கப்பட்டிருந்ததுடன் 10 சந்தர்ப்பங்களில் முதலில் வழங்கப்பட்ட முற்பணத்தை செலுத்துவதற்கும் முன்னர் மீண்டும் முற்பணம் ஒன்று வழங்கப்பட்டிருந்தது. மேலும், 2020 ஆகஸ்ட் 28ஆம் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதி சுற்றறிக்கையின் 9.1 (ஆ) பந்தியின் பிரகாரம், ஒரு சந்தர்ப்பத்தின் போது ரூபா 100,000 உச்ச அளவு வரை நிமித்த உப கட்டு நிதி ஒன்றை பெற்றுக் கொடுக்க முடியுமான போதிலும் முதலில் வழங்கப்பட்ட முற்பணம் தீர்ப்பனவு செய்வதற்கு முன்னர் மேலும் முற்பணமொன்று வழங்கப்பட்டதனால் 2 சந்தர்ப்பங்களில் முற்பணத்தைப் பெற்றுக் கொண்ட உத்தியோகத்திற்கு ரூபா 187,644 மற்றும் ரூபா 117,150 ஆன தொகையொன்று தேங்கி யிருந்தது. | பாராளுமன்றத்தின் நாளாந்த நடவடிக்கைகளின் போது, ஒவ்வொரு திணைக்கணங்களினதும் பெரும்பாலான பணிகளுக்காக தேவையான கொள்வனவுகள் தொடர்பான வேண்டுகோள்கள் நிறைவேற்றப்படுவது, விநியோகம் மற்றும் சேவை அலுவலகத்தின் ஊடாக என்பதுடன் தேவையான முற்பணங்களை கோரப்படுவது விநியோகம் மற்றும் சேவை பணிப் பிரிவின் உதவி பணிப்பாளரினாலே (நிர்வாகம்) ஆகும். அதன் பிரகாரம், ஒவ்வொரு தேவைப்பாட்டுக்காக வெவ்வேறாக முற்பணங்கள் வழங்குதல் மேற்கொள்ளப்படுகின்றது. பல்வேறு நாடுகளின் வெளிநாட்டு தூதுவர்க்குழு, தூதுவர்கள் மற்றும் அரச தலைவர்கள் மிகவும் குறுகிய அறிவித்தலின் ஊடாக பாராளுமன்றத்திற்கு சமூகம் தருவதுடன் அவர்களின் தேவைகளை நிறைவேற்றுவதற்கு தேவையான விநியோகங்கள் மற்றும் சேவைக்காக முற்பணங்கள் பெற்றுக் கொள்வதற்கு நேர்வதுடன் முன்பு பெற்றுக்கொண்ட முற்பணங்கள் செலுத்தப்படுவதற்கு முன்னர் மீண்டும் முற்பணங்கள் பெற்றுக் கொள்வதற்கு நேர்வதை தவிர்க்க முடியாதிருப்பதுடன் அவ்வாறான சந்தர்ப்பங்களில் குறைந்த அளவிலான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. | சுற்றறிக்கையின் பிரகாரம், நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | தேவைப்பாடுகள் தொடர்பாக முறையான திட்டமொன்றை தயாரித்துக் கொள்ளாமல் முற்பணங்கள் செலுத்தப்படுவதனால் 9 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்டுள்ள கூட்டு மொத்தம் ரூபா 197,150 ஆன முற்பணத் தொகையில் கூட்டு மொத்தம் ரூபா 98,751 அவ்வாறெனில் நூற்றுக்கு 31 இல் இருந்து நூற்றுக்கு 86 வரையான வீச்சில் பணம் செலவிடப்படாமல் மீண்டும் தீரக்கப்பட்டுள்ளது. | எதிர்காலத்தில் அரச நிதி சுற்றுநருபம் மற்றும் நிதிப் பிரமாணம் 371(2) மற்றும் 371(5) என்பவற்றல் கவனத்தை ஏற்படுத்தி முப்பணம் விண்ணப்பிக்கப்படும்போது உரிய பணி தொடர்பான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு, சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும், முற்பணங்கள் உபயோகப்படுத்தல் வீச்சை இழிவு படுத்திக் கொள்வதற்கும் உரிய உத்தியோகத்தர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாக. | தேவைப்பாடு தொடர்பாக முறையான மதிப்பீடு ஒன்றை தயாரித்து முற்ப்பணங்களை பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 செயலாற்றல்**

**3.1.1 திட்டமிடல்**

**(அ) பெறுகைகள் திட்டமிடல்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (i) | 2020 ஆகஸ்ட் 28 ஆம் திகதிய 02/2020 ஆம் இலக்கமுடைய அரச நிதி சுற்று நிருபத்தின் 04 ஆவது பந்தியின் பிரகாரம் அனைத்து உத்தியோகத்தர்களினாலும் தமது நிறுவனத்திற்கு பொறுப்பு அளிக்கப்பட்டுள்ள விஷயங்கள் மற்றும் பணிகள் தொடர்பாக எதிர்வரும் வருடத்தின் மீண்டெழும் மற்றும் மூலதன வேலை திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதற்காக வருடாந்த பெறுகை திட்டம், நடப்பாண்டின் டிசம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு முன்னர் தயாரிக்கப்பட்டு பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் அங்கீகாரத்தை பெற்றுக் கொண்டு, அதன் பிரதியொன்றை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த பெறுகை திட்டம் மீளாய்வாண்டின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருக்கவில்லை. | 2024 ஆம் வருடத்திற்கான பெறுகை திட்டம் என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டு அங்கீகாரம் பெற்றுக் கொள்ளுதல் முறையாக இடம் பெற்றதுடன், உரிய கால வரையறைக்குள் உள்ளடங்கும் வகையில் மற்றும் அந்த அங்கீகாரத்துடனான பெறுகை திட்டத்தின் பிரதியொன்றை கணக்காய்வுக்கு சமர்ப்பிக்குமாறு குறித்த உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | அங்கீகரிக்கப்பட்ட பெறுகை திட்டத்தை குறித்த காலத்திற்குள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |
| (ii) | கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டின் பெறுகை திட்டம் உள்ளடக்கப்பட்ட ரூபா 462,037,552 ஆன 53 பெறுகை விடயங்களுக்கு, | தரவுகளை உள்ளடக்கும் போது நேர்ந்திருந்த தாமதப் பிழைகளின் பிரகாரம் அவ்வாறு இடம் பெற்றிருப்பதுடன் அது தொடர்பாக | சரியாக தயாரிக்கப்பட்ட பெறுமை திட்டம் சமர்ப்பிக்கப்பட |

| | | |
|---|---|---|
| வருட இறுதியின் முன்னேற்றம் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்படாதன் காரணமாக அதன் ஆக்கபூர்வமான தன்மையை கணக்காய்வின் போது மதிப்பீட்டுக்கு உள்ளடக்க முடியாதிருந்ததுடன் கூட்டு மொத்தம் ரூபா 191,198,552 ஆன மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்பட கூடாத 25 பெறுகை விடையங்களின், பெறுகை விடயங்கள் முழுமைப்படுத்தப்பட வேண்டிய திகதியாக 2022 ஆம் வருடத்தின் திகதிகள் குறிப்பிடப்பட்டிருந்தது. | மீளாய்வாண்டின் பெறுகை திட்டத்தின் முன்னேற்றம் செயலாற்றல் அறிக்கையில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் ரூபா 401,878,857.86 பெறுமதியான வேலைகள் நிறைவேற்றப்பட்டுள்ளன. 2024 பெறுகை திட்டத்தின் போது முன்னேற்றம் பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரகாரம் தயாரிக்கப்பட்டு எதிர்காலத்தில் சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தேவையான ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளன. | மிகவும் கவனத்தில் கொள்ளுமாறு வேண்டும். |

## 3.2 பணிப்பொறுப்புகள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டில் பாராளுமன்றத்தில் 105 கூட்ட அமர்வுகள் இடம்பெற்றிருந்ததுடன் அதில் 225 பாராளுமன்ற உறுப்பினர்களில் 150 நபர்களை விடவும் குறைவாக பங்கு பற்றி இருந்த கூட்ட அமர்வுகளின் எண்ணிக்கை 24 ஆகவும் 150 உறுப்பினர்களுக்கும் 200 உறுப்பினர்களுக்கும் இடையிலான எண்ணிக்கையானவர்கள் பங்கு பற்றி இருந்த கூட்ட அமர்வுகளின் எண்ணிக்கை 78 ஆகவும் இருந்தவுடன் 200 உறுப்பினர்களை விட கூடுதலாக பங்கு பெற்றிருந்த கூட்ட அமர்வுகள் 3 மாத்திரமே ஆகும். | விடையுடன் இணங்குவதாக. | கூட்டங்களுக்கான பங்குபற்றுதல்களை அதிகரித்துக் கொள்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

## 3.3 செயற்திட்டத்தை பூர்த்தி செய்யாமல் கைவிடுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 ஆம் வருடத்தின் பெறுகை திட்டத்தின் பிரகாரம் பாராளுமன்றத்தின் வளாகத்தில் அமைச்சின் அறைக்காக வளி பதமாக்கி கட்டமைப்பொன்றை வழங்கி பொருத்துவதற்கு, பரிசீலனை மேற்கொள்வதற்கு மற்றும் ஆரம்பிப்பதற்காக 2021 அக்டோபர் 12 ஆம் தேதி வெட் அடங்காத ரூபா 20,464,930 ஆன தொகைக்கு டெண்டர் வழங்கப்பட்டிருந்ததுடன் 3 மாதங்களினுள் வேலை நிறைவு செய்யப்பட்டு பாராளுமன்றத்துக்கு கையளிப்பதற்கு 2021 அக்டோபர் 26 | ஒப்பந்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் ஒப்பந்ததாரரின் ஒப்பந்த விலைகளை அதிகரித்துக் கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள் அடிப்படையில் இருதரப்பினர்களுக்கும் இடையில் ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட இணக்கப்பாட்டின்மையின் காரணமாக குறித்த காலப்பகுதியினுள் அந்த ஒப்பந்தத்தை நிறைவு செய்வதற்கு முடியாது போனது. பணம் எதுவும் | ஒப்பந்த உடன்படிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| ஆம் தேதி ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும் 2023 டிசம்பர் 31 ஆம் திகதியிலும் வேலை நிறைவு செய்யப்படாதிருந்ததுடன் ஒப்பந்ததாரரினால் அந்தப் பணி கைவிடப்பட்டிருந்தது. | விடுவிக்கப்படாத போதிலும் ஒப்பந்ததாரினால் பாராளுமன்ற வளாகத்தினுள் எடுத்துவரப்பட்ட பொருட்கள் தொடர்ந்தும் வளாகத்தில் காணப்படுகின்றன. எவ்வாறு இருந்தபோதிலும் அரசுக்கு பொருளியல் ரீதியாக நன்மையொன்றை ஏற்படுத்தும் வகையில் மீண்டும் இந்த ஒப்பந்தத்தை செயல்படுத்துவதற்கு முடியுமான வல்லமையை தேடிப் பார்க்குமாறு உரிய உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |

### 3.4 செயற்திட்டங்களை நிறைவேற்றுதல்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சின் அவதானிப்புக்களின் கீழ் ஜெயந்திபுரம் மற்றும் பின்னியற வில் அமைந்துள்ள பாதுகாப்பு கட்டிடத்தை மறுசீரமைப்பதற்காக முறையே ரூபா 37,147,488 மற்றும் ரூபா 41,759,760 ஆன மதிப்பிடப்பட்ட தொகைக்கு நகர அபிவிருத்தி அதிகார சபையின் சேவையை பெற்றுக் கொள்வதற்கு 2018 ஆகஸ்ட் 22ஆம் தேதி அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்தது. அவ்வாறு இருந்த போதிலும், வெகுசனை அமைச்சு வழங்கி இருந்த அவதானிப்புகளில் காட்டப்பட்டுள்ளதன் பிரகாரம் ‘‘கொள்கையின் அடிப்படையில் முன்மொழிவுக்கு இணங்கி இருந்த போதிலும் நகர அபிவிருத்தி அதிகார சபை இவ்வாறான வேலைக்கு விசேடமான நிறுவனம் ஒன்று இல்லை என்பதுடன் பெறுகை நடைமுறையை பின்பற்றுதலின் ஊடாக பொருத்தமான ஒப்பந்ததாரர் ஒருவரை தெரிவு செய்ய முடியும் என்பதாக’’ குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் அவ்வாறு மேற்கொள்ளாமல் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அந்த பணிகள் ஒப்படைக்கப்பட்டிருந்தது. | 2018 ஆகஸ்ட் மாதம் 22ஆம் தேதி அமைச்சரவை அங்கீகாரம் நிதி மற்றும் வெகுசன அமைச்சின் அவதானிப்புக்களின் கீழ் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்ததாக எங்களினால் அவதானிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த சமயத்திலும் நகர அபிவிருத்தி அதிகார சபையின் மேற்பார்வையின் அடிப்படையில் கடற் படையுடன் விவசாய மாளிகையை நவீன மயப்படுத்தல் மிகவும் வினைத்திறனான செயல்திட்டம் ஒன்றாக நிறைவு செய்யப்பட்டிருந்ததுடன் அரசுக்கு பொருளாதார ரீதியாக கூடுதலான நன்மை ஒன்றை பெற்றுக் கொடுக்கும் எதிர்பார்ப்புடன் அந்த முறைமையையே இந்த நிர்மாண பணிகளுக்காகவும் பின்பற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் மற்றும் பெறுகை நடைமுறையை பின்பற்றுவதன் ஊடாக பொருத்தமான ஒப்பந்ததாரர் ஒருவரை தெரிவு செய்ய முடியும் என்பதாக அமைச்சரவை தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததன் பிரகாரம் அந்த அவதானிப்பு சரியானது ஒன்றே ஆகும். | நிதி மற்றும் வெகுசன அமைச்சின் அவதானிப்புகளுக்கு இணங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2021 ஆம் வருடத்தில் நடைமுறைப்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் குறித்த காலத்திலேயே நடைமுறைப்படுத்தப்படாமை, நிர்மாண பணி சம்பந்தமான நிலத்தின் மண் ஆய்வறிக்கை ஒன்றை பெற்றுக் கொண்டு அதற்கு இணங்க மதிப்பீட்டை தயாரித்துக் கொள்ளுதல் மற்றும் நிர்மாண பணி நடவடிக்கைகள் சம்பந்தமாக வெளிவாரி ஆலோசனை சேவை பெற்றுக் கொண்ட தரப்பினரிடம் இருந்து தேவையான ஆலோசனைகள் முறையாக கிடைக்கப் பெறாமை போன்ற காரணங்களினால் ஜெயந்திபுரம் மற்றும் பின்னியற வில் அமைந்துள்ள பாதுகாப்பு கட்டிட மறுசீரமைப்பு மற்றும் பாராளுமன்ற பொதுமக்கள் சுகாதார கட்டமைப்பு ஒன்றை புனர்நிர்மாணம் செய்தல் ஆரம்ப மதிப்பீட்டின் முறையே ரூபா 30,583,642ஆல் ரூபா 55,381,311 ஆல் மற்றும் ரூபா 18,427,968 ஆல் அவ்வாறெனில் முறையே நூற்றுக்கு 82 ஆல், நூற்றுக்கு 133 ஆல் மற்றும் நூற்றுக்கு 84 ஆல் அதிகரித்து இருந்தது. | இணங்குகின்றேன். ஆரம்ப மதிப்பீடு மற்றும் இறுதி மதிப்பீடுகளுக்கு இடையில் கணக்காய்வினால் காட்டப்பட்டிருந்த கிரயம் அதிகரித்தல் வீச்சு சரியானதாகும். அதிமேதகு சபாநாயகரினால் மேற்கொள்ளப்பட்ட மிகவும் குறுகிய அறிவித்தலுக்கு மிகவும் விரைவாக பெற்றுக் கொடுக்கப்பட்ட பதில் ஒன்றாக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு ஆரம்ப மதிப்பீடு தயாரிக்கும் போது மண் ஆய்வு அறிக்கை கவனத்தில் கொள்ளுதல் கைவிடப்பட்டிருத்தல், இந்த கால பகுதிக்குள் நாட்டினுள் கோவில் தொற்று திட்டம் ஒன்று காணப்படுதல், சந்தையில் மூலப் பொருட்களின் கிரயம் மிகவும் கூடிய பெறுமதியில் அதிகரித்தல், இந்த நிர்மாண பணி தாமதம் அடைவதற்கும் அதன் விளைவாக கிரயம் குறிப்பிடத்தக்களவு தொகையினால் அதிகரிப்பதற்கும் காரணமாக இருந்தது. | திட்டங்களை தயாரித்தல் மற்றும் மதிப்பீட்டை தயாரித்தல் சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | 2019 ஜூன் 25ஆம் தேதி கிடைக்கப்பெற்றிருந்த அமைச்சரவை தீர்மானத்தின் பிரகாரம் பாதுகாப்பு கட்டிடங்களின் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக இலங்கை கடற்படை மனித சக்தியை ஈடுபடுத்த வேண்டி இருந்த போதிலும், அதற்கு முரணாக பின்னியற பாதுகாப்பு கட்டிடத்தின் மறுசீரமைப்பு நடவடிக்கைக்காக தனிப்பட்ட ஒப்பந்த நிறுவனம் ஒன்றின் சேவையை ஈடுபடுத்தி இருந்தது. | குறித்த நிறுவனம், இலங்கை கடற்படையினால் செய்ய முடியாத வேலையை நிறைவேற்றிக் கொள்வதற்காக அவர்களின் முறையான நடைமுறையின் பிரகாரம் ஈடுபடுத்தப்பட்ட உப ஒப்பந்ததாரர் ஒருவர் ஆவார். | முறையான வகையில் உரிய அங்கீகாரம் பெற்றுக் கொள்ளப்பட வேண்டும். |
| (ஈ) | பின்னியற பாதுகாப்பு கட்டிடத்தில் மறுசீரமைப்பு நடவடிக்கைகளுக்காக நகர அபிவிருத்தி அதிகார சபையினால் முறையான அங்கீகாரமின்றி வேறு 02 நிறுவனங்களின் சேவையை பெற்றுக் கொண்டிருந்ததுடன் அதற்காக ஒட்டுமொத்தம் ரூபா 3,198,400 செலுத்தப்பட்டிருந்தது. | நகர அபிவிருத்தி சபையிடம் காணப்படாத திறன்களை வெளிவாரியான இரண்டு நிறுவனங்களிடமிருந்து அங்கீகரிக்கப்பட்ட முறைமையின் கீழ் தெரிவு செய்து பாராளுமன்ற சேவைக்கு ஈடுபடுத்தப்பட்டிருந்தது. இதற்காக மேற்கொள்ளப்பட்ட பெறுமதி | முறையான வகையில் உரிய அங்கீகாரம் பெறப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டதன் பிரகாரம் சரியானதாகும். | |
| (உ) | நகர அபிவிருத்தி அதிகார சபையின் ஆலோசனையின் கீழ் மேற்கொள்ளப்பட்டிருந்த, கணக்காய்வினால் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்ட 3 செயல் திட்டங்களுக்குரிய ஒவ்வொரு செயல்திட்டம் தொடர்பாகவும் பாராளுமன்றம், நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் ஒப்பந்தத்திற்கு முற்பட்டிருக்கவில்லை. | ஜெயந்திபுரம் மற்றும் பின்னியர நிர்மாண செயற்திட்டம் 02க்காக நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வெவ்வேறாக ஒப்பந்தங்களுக்கு முற்பட்டிருந்ததுடன் அவற்றின் பிரதிகள் கணக்காய்வுக்கு சமர்ப்பிக்குமாறு ஆலோசனை வழங்கப்பட்டதுடன் பாராளுமன்ற வளாகத்தினுள் முன்மொழிந்த ஒட்டுமொத்த மேம்படுத்தல் செயற்திட்டத்தினுள் ஒப்பந்தம் ஒன்று தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதனுள் உள்ளடக்கப்பட்ட உப செயல்திட்டத்திற்காக கிரயம் மதிப்பிடுதல் வெவ்வேறாக அடையாளம் காணும் தேவைப்பாடுகள் எங்களினால் நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அறிவிக்கப்பட்டுள்ளதுடன் அந்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்படுவதற்கு தாமதமாக இருந்தது. | பெறுகை வழிகாட்டல்களின் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஊ) | பொதுமக்கள் சுகாதார கட்டமைப்பு மறுசீரமைப்பு இடம்பெறும் கால வரையறையினுள் பாவனைக்குட்படுத்துவதற்காக 2021ஆம் வருடத்தில் நடமாடும் கழிவறைகள் 4 வாடகை அடிப்படையில் பெறப்பட்டிருந்ததுடன் அதற்காக ஒரு மாதத்திற்கு ரூபா 60,000 செலுத்தப்பட வேண்டி யிருந்தது. 2023 டிசம்பர் 31 திகதி ஆகும் போது கடந்திருந்த காலம் 30 மாதங்களுக்காக ஒட்டுமொத்தம் ரூபா 1,800,000 செலுத்தப்பட்டிருந்தது. இரண்டு வருடங்களுக்கு அதிக காலத்தினுள் செயற்திட்டம் மேற்கொள்ளப்படுவதனால் இந்த நடமாடும் கழிவறைகள் (தற்காலிக கழிவறைகள்) 2 வருடங்களுக்கு அதிக காலம் வரை பெற்றுக் கொள்வதற்கு நேர்ந்துள்ளது. | அவதானிப்புடன் இணங்குவதோடு 2021 ஆம் வருடத்தில் இருந்து இந்த நடமாடும் கழிவறை கட்டமைப்பை ஸ்தாபித்திருந்ததுடன் அது பாராளுமன்றத்தை பார்வையிடுவதற்காக வருகை தருகின்ற பொதுமக்களினதும், பாதுகாப்பு பிரிவினதும், அரசின் உத்தியோகத்தர்களினதும் விறியோகத்தர்களினதும் தேவையை நிறைவேற்றிக் கொள்வதற்காக ஒதுக்கப்பட்டிருந்தது. | திட்டமிடப்பட்ட காலத்திலும் பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |

**3.5 சொத்துக்கள் முகாதைத்துவம்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆகஸ்ட் 28 இன் 01/2020 இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் 11.1 பந்தியின் தொடர் இலக்கம் 06 பிரகாரம் நாளது வரையாக பொருள் மெய்மைஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை எதிர் வருடத்தின் மார்ச் 31 ஆம் தேதிக்கு முன்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், பாராளுமன்றத்தினால் முன்னைய வருடத்தினது மற்றும் மீளாய்வாண்டினது பொருள் மெய்மையாய்வு அறிக்கை இந்த அறிக்கை தினமான போதிலும் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2021 ஆம் வருடத்திற்கான பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2 வருட கால தாமதத்தின் பின்னர் 2023 ஏப்ரல் 12 ஆம் தேதி கணக்காய்வுக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. | 2022 ஆம் வருடத்திற்கான பொருள் மெய்மையாய்வு மேற்கொள்ளப்பட்டு அதன் அறிக்கை என்னிடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளதுடன் அதன் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு நிறைவடைந்த உடனேயே உங்களுக்கு பிரதியை பெற்றுக் கொடுப்பதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. 2023 ஆம் வருடத்திற்கான மெய்மையாய்வு சபை நியமிக்கப்பட்டுள்ளதுடன் அதன் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு வார இறுதி தினங்களில் மேற்கொள்ளப்பட்டு இரண்டு நாட்களுக்குள் அவற்றை நிறைவு செய்வதற்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | சுற்று நிருபத்தின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு குறித்த தினத்தில் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | பொது நிர்வாக மற்றும் முகாமைத்துவ அமைச்சின் 2017 மே 04 திகதிய 02/2017 இலக்க இணைந்த சேவைகள் சுற்றறிகதை மற்றும் 2016 திசெம்பர் 22 திகதிய தேசிய நூலக மற்றும் ஆவண சேவைகள் சபையின் 2004/நூசே/1(2016-திருத்திய) இலக்க சுற்றறிக்கையின் 3.1 பிரிவு பிரகாரம், நூலகங்களிற்கு கையேற்கப்படும் ஆவண, அச்சு, செவிப்புலன் மற்றும் இலத்திரனியல் ஊடகம் உள்ளிட்ட நூலக பொருட்கள், தொடர்பாக நடாத்த வேண்டிய வருடாந்த கணிப்பீடு, பாராளுமன்ற் உறுப்பினர்களின் நூலகம் தொடர்பாக மேற்கொண்டிருக்கவில்லை | கூட்டங்கள் இடம் பெறாத தினங்களிலும் கூட நூலகத்தினுள் மேதகு பாராளுமன்ற உறுப்பினர்களின் பாவனையை அவதானிக்க முடிவதுடன் அதன் வருடாந்த ஆய்வொன்றினை நடத்துதல் நடைமுறையில் கடினம் தன்மையுடன் காணப்பட்ட போதிலும் 9 ஆவது பாராளுமன்றம் நிறைவடைந்த பின்னர் கிடைக்கின்ற கால பகுதியில் நூலகத்தின் புத்தகங்களுக்கான வருடாந்த மெய்மையாய்வை நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாக. | சுற்று நிருபத்தின் பிரகாரம் பொருள் மெய்மையாய்வு இடம் பெற வேண்டும். |

## 3.6 முகாதைத்துவ பலவீனங்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 1 வருடத்துக்கும் 3 வருடங்களுக்கும் இடையில் அறவிடப்பட வேண்டிய கடன் மீதி ரூபா 230,943 மற்றும் 7 வருடங்களை விஞ்சிய கடன் மீதி ரூபா 398,701 வேலை பதவி நீக்கம் செய்யப்பட்ட 3 உத்தியோகத்தர்களுக்குரியதான அந்த உத்தியோகத்தர்கள் சம்பந்தமான விசாரணைகள் மற்றும் சட்ட நடவடிக்கைகள் நிறைவு செய்யப்படாததன் காரணமாக கடன் மீதியை அறவிட்டுக் கொள்வதற்கு முடியாது உள்ளது. | ரூபா 230,942 ஆன தொகை பதவி நீக்கம் செய்யப்பட்டுள்ள உத்தியோகத்தர் இடமிருந்து அறவிடப்பட வேண்டியதுடன் அவரின் விசாரணைகள் நிறைவடைந்த பின்னர் கடன் தொகை தொடர்பான தீர்மானம் ஒன்று மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக மற்றும் 07 வருடங்களுக்கு அதிக காலத்தை வெஞ்சிய ரூபா 398,701 ஆன கடன் மீதி தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் நிறைவடையாத காரணத்தினால் அந்த தொகை தொடர்ந்தும் நிலுவை மீதி ஒன்றாக காணப்படுகிறது. | நிலுவை கடன் மீதிகளை அறவிட்டுக் கொள்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டில் உலர் உணவு பெறுகைக்காக போட்டித் தன்மையிலான விலை மனு கோரப்பட்டு குறைந்த விலை தெரிவு செய்யப்படுவதற்கு பதிலாக இலங்கை கூட்டுறவு விற்பனை சங்கத்திற்கு மாத்திரம் விலை மனு கூறப்பட்டு உலர் உணவு கொள்வனவு செய்யும் நடைமுறையின் ஊடாக போட்டித் தலைமையிலான குறைந்த விலை ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு இருந்த சந்தர்ப்பம் இழக்கப்பட்டிருந்தது. | அரசின் கூட்டுறவு திணைக்களத்தின் மேற்பார்வையின் கீழ் செயல்படுகின்ற நிறுவனம் ஒன்றாக காணப்படுதல், பாராளுமன்றத்தின் கொடுப்பனவு செயற்பாடுகளுக்கு இணக்கத்தன்மை காட்டப்படுவதனால் அவர்களால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த விலைகள் சந்தை விலைகளோடு போட்டித் தன்மையில் காணப்பட்டதனாலும் நீண்ட காலத்திலிருந்து கூட்டுறவு விற்பனை சங்கத்திடமிருந்து பொருட்கள் 2024 ஆம் வருடத்தில் இருந்து கணக்காய்வினால் முன்மொழிந்த பிரகாரம் போட்டித் தன்மையிலான சந்தை விலை ஈடுபடுத்துவதற்கு வழிவகைக்கப்பட்டுள்ளது. | பெறுகைக்கான போட்டித் தன்மையிலான விலை மனு கூறப்பட்டு குறைந்த விலை தெரிவு செய்யப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (இ) | பாராளுமன்ற கட்டிடத் தொகுதியின் முன்னாள் அமைந்துள்ள 13 விற்பனை நிலையங்களின் உடனான பொதுமக்கள் சிற்றுண்டி சாலை தொகுதியின் போலீஸ் சேவை மகளிர் பிரிவிற்கு மாதாந்தம் வாடகையாக ரூபா 100,000 திற்கு 2023 ஜூன் 01ஆம் திகதியில் இருந்து 2025 மே 31 ஆம் திகதி வரை ஆன | தற்போது குறித்த குத்தகை ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பாராளுமன்றத்துக்கு பார்வையிடுவதற்கு வருகை தருகின்ற பாடசாலை மாணவர்கள் பொதுமக்கள் மற்றும் கூட்ட தினங்களில் அதிமேதகு | நிறுவனத்துக்கு உரிய பௌதிக வளங்கள் ஆக்கபூர்வமானதாக பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்ததுடன் 2023 டிசம்பர் மாதம் ஆகும்போது அதற்காக தேவையான குத்தகை ஒப்பந்தம் ஒன்று கைச்சாத்திடப்பட்டிருக்க வில்லை. மேலும் போலீஸ் சேவை மகளிர் பிரிவினால் அந்த தொகுதியில் அமைந்துள்ள 09 விற்பனை நிலையங்கள் ஒரு விற்பனை நிலையத்துக்கு மாதாந்தம் ரூபா 40,000 வாடகை அடிப்படையில் மீண்டும் மூன்றாம் தரப்பினருக்கு வாடகை வழங்கப்பட்டதனால் பாராளுமன்றத்தினால் ஆக்கபூர்வமானதாக பௌதிக வளங்கள் உபயோகப்படுத்தலுக்கு முடியாது போனது அவதானிக்கப்பட்டது. | பாராளுமன்ற உறுப்பினர்களின் பாதுகாப்பு உத்தியோகத்தர்களின் உணவு பானங்களை விநியோகித்தல் மற்றும் ஏனைய ஆரம்ப வசதிகளை பெற்றுக்கொள்வதற்கும் வாகனங்களை நிறுத்தி வைப்பதற்கும் பாராளுமன்றத்தில் காணப்படுகின்ற அந்த பாதுகாப்புக்கும் குறிப்பிடத்தக்க அளவு தாக்கம் காணப்படுகின்ற இந்த நிலப்பகுதி 2011 ஆம் வருடத்திலிருந்து போலீஸ் திணைக்களத்தின் சேவா மகளிர் பிரிவின் மூலம் இந்த நிலப்பகுதியின் முக்கிய நோக்கம் நிறைவேற்றப்படும் வகையில் பாராளுமன்றத்துக்கு செலவு பாரம் ஒன்று இல்லாத வகையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் பௌதிக வளங்களை பயன்படுத்தல் மேலும் ஆக்கபூர்வமான வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும் என்ற கணக்காய்வினால் அவதானிக்கப்பட்டதன் பிரகாரம் நிலவுகின்ற பாதுகாப்பு நிலைமையையும் கவனத்தில் கொண்டு புதிய பிரவேசம் ஒன்றை மேற்கொள்ளுமாறு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கப்பட்டுள்ளது. | |

## 3.7 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020, 2021 மற்றும் 2022 ஆண்டுகளின் கணக்காய்வாளர் நாயகத்தின் பொழிப்பு அறிக்கையின் 3.4 மற்றும் 3.5 பந்திகளில் காட்டப்படும் "2018 பெப்ரவரி 15 இன் 01/2018 இலக்க, வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை சுற்றறிக்கையின் 1.2 பந்தி மற்றும் வியாபார மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்கள பணிப்பாளர் நாயகத்தினால் பாராளுமன்ற பொது செயலாளரிற்கு வெளியிட்டிருந்த, இலக்கம் TIP/SS/01/84 மற்றும் 2019 ஏப்ரல் 25 திகதிய கடிதத்திற்கு அமைவாக பாராளுமன்ற அலுவலர்களுக்கு நிவாரண | பாராளுமன்றத்தின் சிரேஷ்ட அலுவலர்களுக்கு நீண்ட காலமாக கடைபிடிக்கப்பட்டு வந்த நிவாரண அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் வழங்கும் செயன்முறை தொடர்பாக கணக்காய்வு மூலம் 2019 வருடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட அவதானிப்புக்களுடன் செயன்முறை தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டது. பாராளுமன்றத்தின் சிரேஷ்ட அலுவலர்கள் நீண்ட காலமாக அனுபவித்து வந்த இந்த சலுகை தொடர்பாக ஏற்பட்ட பிரச்சினை, மதிப்பிற்குரிய சபாநாயகர் | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| அடிப்படையில் மோடார் வாகன அனுமதிப் பத்திரம் வழங்குதல் தொடர்பாக சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் மற்றும் ஆலோசனைகளுக்கு முரணாக, ''சிரேஷ்ட மட்டம்'' இற்குரிய நிறைவேற்று பதவியொன்றில் ஆறு ஆண்டுகால (06) தொடர்ச்சியான சேவைக் காலத்தை பூர்த்தி செய்திருக்காத பாராளுமன்ற ஆளணியின் 03 அலுவலர்களுக்கு (அனுமதிப் பத்திரத்திற்கு உரித்தான பதவிக்குரிய தொடர்ச்சியான சேவைக் காலம் 02 மாதமமும் 01 வருடத்திற்கும் இடையிலான) நிவாரண அடிப்படையில் மோட்டார் வாகன அனுமதிப் பத்திரம் வழங்குதல்'' தொடர்பான முறையான அங்கீகாரம் கணக்காய்விற்கு சமரப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | தலையீட்டுடன் நிதி அமைச்சரின் கவனத்திற்கும் உள்ளாக்கப்பட்டது. எவ்வாறாயினும், இந்த பிரச்சினையை தீர்ப்பதற்கு விடையொன்றாக தற்போது பாராளுமன்றத்தின் ஆளணியினரை 6/2006 சுற்றறிக்கையின் ஏற்பாடுகளுக்கமைய நிலைப்படுத்துவதற்கு ஆலோசகரொருவரின் உதவியோடு முன்மொழிவொன்று தயாரிக்கப்பட்டு உரிய அங்கீகாரத்திற்கு அனுப்புவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | |

## 4. மனிதவள முகாமைத்துவம்

| **கணக்காய்வு அவதானிப்பு** | **பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| பாராளுமன்ற பொது செயலாளரின் ஆளணியின் 2023 திசெம்பர் 31 திகதியன்று அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை 994 ஆனதுடன், அதில் சிரேஷ்ட, மூன்றாம், இரண்டாம் மற்றும் ஆரம்ப மட்டத்திலான பதவி வெற்றிடங்களின் எண்ணிக்கை முறையே 12, 36, 52 மற்றும் 55 ஆக மொத்த 155 ஆனது. | அவதானிப்பை ஏற்றுக் கொள்கிறேன். | வெற்றிடங்ளை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |